1974 மார்ச் 21]

திரு. கே. என். குமாரசாமி: ஆயிரம் மீட்டருக்கு மேல் உயரம் உள்ள மலைப் பிரதேசத்தில் இருக்கிறவர்களுக்கு குளிர் காலப் படி கொடுக்க வேண்டுமென்பது விதி என்று சொன்னார்கள். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவரையோ மற்றவர்களையோ கலந்து அதன் பிறகு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்வதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. விதி இருக்கிறபோது அதன்படி உயரம் உள்ள இடங்களில் பணி புரிகிற ஊழியர்களுக்கு இந்தப் படி கொடுக்க உத்தரவிடுவதில் அரசு காலதாமதம் செய்வதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆயிரம் மீட்டருக்கு மேலும் 1,500 மீட்டருக்குக் குறைவாகவும் உயரம் உள்ள மலைப் பிரதேசங்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு 1968–69 நிதி ஆண்டிலிருந்து மலைப் படி வழங்க 1968 ஆம் ஆண்டு நிதித் துறை ஆணை பிறப்பித்துள்ளது. 1,082 மீட்டர் என்கிறார்கள். 1,082 மீட்டர்தானா, அல்லது 900-த்தோடு நின்றுவிட்டதா என்பதையெல்லாம் கவனிக்க வேண்டும். புள்ளிவிவரங்களையெல்லாம் சேகரித்துத்தான் முடிவு எடுக்க வேண்டும். அதிலே எந்த இழுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப் படுகின்றன.

தேர்வுநிலை ஆசிரியர்கள்.

***535 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்**: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி தெற்கு சரகம், கல்வி அதிகாரியின் அதிகாரவரம்பிற்குட்பட்ட தனியார் பள்ளிகளில் பணி புரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 1971 ஆம் ஆண்டில் தேர்வு நிலைப் பதவிகள் கொடுக்கப்பட்ட பிறகு One Man Commission ஆல் திருத்தப்பட்ட ஊதியம் நிர்ணயம் செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணமென்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பட்டதாரி ஆசிரியர்களது ஊதிய விகிதமும் தேர்வு நிலைப் பட்டதாரி ஆசிரியர்களின் ஊதிய விகிதமும் ஒரு மட்டத்தில் ஏறக்குறைய சமமாக இருப்பதால் நீண்ட கால சேவை செய்த பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு நிலைப் பதவிகளை வகிக்கும்போது, அவர்கள் பட்டதாரி ஆசிரியர்களாக இருக்கும் போது பெற்று வந்த ஊதியத் தொகையை தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் பெற நேரிடுகிறது. சம்பளக் குழு நிர்ணயித்த ஊதிய விகிதத்தை மாற்ற இயலாது. ஆசிரியர்கள் ஊதியம் குறையாமல் பார்த்துக்கொள்ள என்ன செய்வது எனும் செயற்குறிப்பு பரிசிலனையில் உள்ளது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவரவர்களே, எவ்வளவு காலதாமதமாகக் கொடுக்கப்பட்டது? அந்தக் காலதாமதத்திற் கான காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, திருநெல்வேலி தெற்கு சரகம் கல்வி அதிகாரியின் அதிகார வரம்பிற்குட்பட்ட தனியார் பள்ளிகளில் பணி புரியும் 15 பட்டதாரி ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை ஊதியம் நிர்ணயம் செய்யப்படவில்லை என்று பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவிக்கிறார். ஆகவே, அவர்கள் ஊதியம் குறையாத அளவிற்கு பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் செலக்ஷன் கிரேட் வழங்கப் பட்டிருக்கிறது. ஆனால், மலையாள மொழி ஆசிரியர்கள் பல்லாண்டுகள் பணியாற்றினாலும் அவர்களுக்கு இந்த நன்மைகள் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அவர்களுக்கும் செலக்ஷன் கிரேட் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும் 'ஃபிசிகல் எஜுகேஷன்' ஆசிரியர்களாக இருப்பவர்கள் செகண்டரி கிரேட் ஆசிரியர்களை விட சிறப்புப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு ஸ்பெஷல் கிரேட் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1974 மார்ச் 21]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இப்பொழுது இல்லை. அதைத் தனியாகத்தான் ஆராய வேண்டும்.

நாட்ராம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம்.

536 **வினா—திரு. டி. சி. திம்மாராய கவுண்டர் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வடார்க்காடு மாவட்டம், நாட்ராம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : *(அ) & (இ) தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டம், நாட்ராம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு யாதொன்றும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. அது மட்டுமல்லாமல், ஆண்டுக்கு 1,500 பதிவுகளாவது பதிவு செய்யப்பட வேண்டும். இல்லையென்றால் நஷ்டத்திற்கு உரியதாகி விடும் என்பதால் அது இப்பொழுது பரிசிலனையில் இல்லை.*

பயணியர் விடுதிகள்.

537 **வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாயூரம் நகரில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் பயணிகள் விடுதி ஒன்று கட்டப்பட்டு வருகின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : *(அ) இல்லை.*

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.